ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்· 448)

Aug (1) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

‘ஸ்ரீ அஹோபில தாஸன்‘ க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..5

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 267)

98. பூர்வம் ஸ்நாத்வா ம்ருதாம்போபி: பச்சாத் கந்தாதிலேபநம்
ஸ்நாநம் ஸ்யாத் தந்மலத்வம்ஸி ப்ராணாயாமை: ஸமாசரேத்

பொருள் -முதலில் மண்ணைத் தண்ணீரில் கலந்து, அந்த கலவையால் குளிக்க வேண்டும். அதன் பிறகு சாந்தம் மற்றும் வாசனைப்பொருட்களைப் பூசிக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்யப்படும் நீராடுதலானது, அனைத்துஅழுக்குகளையும் நாசம் செய்யும். அதன் பின்னர் ப்ராணாயாமம் செய்யவேண்டும்.

99. த்வாதசாவ்ருத்தயா குர்யாத் பூரணம் தாரயா புரா
தாரயேத் ஷோடசாவ்ருத்த்யா த்விஷட்கேந புநஸ்த்யஜேத்

பொருள் - பூரகத்தை (மூச்சை உள்ளே இழுத்தல்) பன்னிரண்டு முறை, தாரா மந்த்ரம் உச்சரித்தபடி செய்யவேண்டும். அதன் பிறகு, மூச்சை பதினாறு எண்ணிக்கைகள் தாரா மந்த்ரத்தை உச்சரிப்பது முடிய அடக்கவேண்டும். பின்னர், இரு ஆறு (அதாவது 12) எண்ணிக்கைகள் தாரா மந்த்ரத்தை உச்சரிப்பது முடிய வெளியேற்றவேண்டும்.

100. ஸவ்யதக்ஷிணபர்யாயை ரேசநாந்தமருத்க்ரமை:
மலாந் க்ஷபயதி ப்ராணநாடீஸ்தாந் பூர்வஸ்ம்சிதாந்

பொருள் - இடது நாசியில் மூச்சை உள்ளிழுக்கவேண்டும் (பூரகம்). வலது நாசியில் வெளியேற்றவேண்டும் (ரேசகம்). இவ்வாறு பூரணமும் ரேசகமும் செய்யும்போது, நாடிகளில் முன்னர் சேர்ந்து இருக்கும் அழுக்குகள் நாசம் அடையும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 413)

திருவாய்மொழி ஆறாம் பத்து ஆறாம் திருவாய்மொழி
மாலுக்கு ப்ரவேசம்

வ்யாக்யானம் - கீழ் இவளுக்குப் பிறந்த தசை முற்றி வ்யஸநம் அதிசயிக்கையாலே மோஹங்கதையாய்க் கிடக்க, அதுகண்டு ஆற்றாளாய் இவளுடைய தோழியும் மோஹிக்க, இத்தசையிலும் இவளை ஜீவிப்பிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார் இவளுடைய வலயாதிகள் காணக்காண சிதிலமாகிறபடியைக் கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக் கூப்பிடுகிறாள். ஓரோ நகர பத்தநாதிகள் வேவப்புக்கால், "ஒரு மாடம் முறிந்தது, மாளிகை முறிந்தது" என்பாரைப்போலே விரஹாக்நியாலே தன் மகள் இழந்தவற்றைச் சொல்லுகிறாள்.

விளக்கம் – கடந்த திருவாய்மொழியானது தோழியின் சொற்களாக இருந்தது; ஆனால் இந்தத் திருவாய்மொழியானது தாயுடைய சொற்களாக உள்ளதன் காரணம் என்ன என்பதை விளக்குகிறார். கடந்த திருவாயொழியில் பராங்குசநாயகிக்குப் பிறந்த மயக்கம் போன்ற பலவும் முற்றிய காரணத்தால் மிகுந்த தளர்வு ஏற்பட்டது; அதன் விளைவாக மயங்கிக் கிடந்தாள்; அதனைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாதபடி இவளுடைய தோழியும் மயக்கம் அடைந்தாள். அந்த நிலையிலும் அவளைப் பிழைக்க வைப்பதற்கான வழிகளை இவளுடைய திருத்தாயார் எண்ணியபடி உள்ளாள்; ஆகவே இவள் நிலையைக் கண்ட பின்னரும் உயிர் தாங்கி நிற்கும் தாயானவள், பராங்குசநாயகியின்

வளையல்கள் போன்ற பலவும் தளர்ந்தபடி உள்ளதைக் கண்டு, அவற்றைத் தனித்தனியே கூறுகிறாள். நகரத்தில் உள்ள ஒவ்வொரு மேடையும் தளரும்போது “ஒரு மாடம் முறிந்தது, ஒரு மாளிகை முறிந்தது” என்று கூறுவது போன்று செய்கிறாள். விரக அக்னி காரணமாகத் தனது மகள் இழந்தவற்றைக் கூறுகிறாள்.

வ்யாக்யானம் - கீழிற்றிருவாய்மொழியில் அலாபதசையாய், “கிடையாது” என்றாலும் விடமாட்டாதபடி தம்முடைய மநோவாக்காயங்கள் அவ்விஷயத்திலே அதிப்ரவணமானபடி சொல்லிற்று; இதில், அந்த அலாபத்தால் வந்த பாரவஸ்யத்தைச் சொல்லுகிறது. “நெடுமாலென்றே நின்று கூவுமால்” என்று தன் வ்யாமோஹத்தைக் காட்டியாயிற்று இவளையிப்படி விளைத்தது; பெரியவன் தாழநின்றால் பொறுக்கலாயிராதிறே. “ராகவேணாபயே தத்தே ஸந்நத:” என்று இவன் தறைப்படும்படியிறே அவன் வ்யாமோஹம் இருப்பது.

விளக்கம் – கடந்த திருவாய்மொழி மற்றும் இந்தத் திருவாய்மொழி ஆகிய இரண்டுமே பிரிவினைக் காண்பிப்பதாக உள்ளன. ஆயினும் இவை இரண்டிற்கும் இடையே உள்ள வேற்றுமையைக் கூறுகிறார். கடந்த திருவாய்மொழியில் அவனை அடைய இயலாமல் உள்ள நிலையில், “கிடையாது” என்றுள்ள நிலையிலும் கூட, தனது “மனம், வாக்கு, செயல்” ஆகியவற்றால் அந்த விஷயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டமை கூறப்பட்டது. இந்தத் திருவாய்மொழியில் அவனை அடையாமல் உள்ள நிலை காரணமாக ஏற்பட்ட பரவசம் கொண்ட தன்மையைக் காண்பித்து அவனுக்கும் இந்த நிலையை ஏற்படுத்தினாள்! ஆனால் அவனுடைய மயக்கம் கண்டால் இவளும் அது போன்று ஈடுபட வேண்டுமோ என்பதற்கு விடை அளிக்கிறார். அனைத்துவிதங்களிலும் உயர்ந்தவன் ஒருவன், தன்னைத் தாழ்த்திக் கொண்டு நின்றால் பொறுத்துக் கொள்ள இயலாது என்பதால் ஆகும். இதற்கு ஒரு உதாரணம் காண்பிக்கிறார்; யுத்தகாண்டம் (19-1) - ராகவேணாபயே தத்தே ஸந்நத: - இராமனால் அபயம் அளிக்கப்பட்டபோது விபீஷணன் நிலத்தைப் பார்த்து நின்று வணங்கினான் - என்பதற்கு ஏற்ப, இவன் உள்ளது போன்று அல்லவோ அவனுடைய மயக்கம் உள்ளது?

6-6-1. மாலுக்கு வையம் அளந்த மணாளற்கு
நீலக் கருநிற மேக நியாயற்கு
கோலச் செந்தாமரைக் கண்ணற்கு என் கொங்கு
அலர் ஏலக் குழலி இழந்தது சங்கே

பொருள் – அடியார்களிடம் இவனும், இவனிடம் அடியார்களும் அன்புடன் கிடக்கும் நிலையைக் கொண்டே அடையாளம் காண்பிக்கக்கூடிய ஸ்வரூபம் கொண்டவனாகவும்; அத்தகைய அன்பு காரணமாகவே இந்த பூமியைத் தான் அல்லாமல் மற்ற யாரும் சொந்தம் கொண்டாடாதபடி அளந்து, மற்ற யாருக்கும் அல்லாமல் தனக்கு மட்டுமே வசப்பட்டது என்று செய்து, அத்தகைய யாசகம் மூலம் பராங்குசநாயகியாகிய தனக்கு இனிமையானவனாகவும்; அந்த இனிமையில் மயங்குவதற்கு ஏற்றபடியாக மிகவும் கருத்த நிறம் கொண்டதும், மழை மேகத்திற்கு ஒப்புமை கூறலாம்படியும் உள்ள திருமேனி கொண்டவனாகவும் உள்ள அவனுக்கு, தேனுடன் கூடிய மலர்கள் கொண்டதால் ஏலம் போன்று களைப்பைப் போக்கவல்ல நறுமணம் கொண்ட அழகான அழகான கூந்தல் கொண்ட எனது மகள் இழந்தது என்னவென்றால், சங்கு வளையல் ஆகும்.

அவதாரிகை - இவள் ஸ்ரீவாமந ப்ராதுர்பாவத்தில் குணசேஷ்டிதங்களிலே யகப்பட்டு வளையிழந்தா ளென்கிறாள்.

விளக்கம் – "பராங்குசநாயகியான தனது மகள் வாமன அவதாரத்தின் குணங்களிலும் செயல்களிலும் ஈடுபட்டவளாகத் தனது வளையல்களை இழந்தாள்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (மாலுக்கு) மின்னிடை மடவாரிலே, நீ எனக்கு வேண்டாவென்ன, நீ எனக்கு வேணுமென்று தடுமாறி நின்ற நிலையைக் காட்டியாயிற்று இவளை இப்பாடு படுத்திற்று. ஸர்வேச்வரனான உத்கர்ஷந் தோற்ற நின்றானாகில் இப்பாடுபடாள்கிடீர்!

விளக்கம் – (மாலுக்கு) - அன்பு கொண்டவன். அத்தகைய அன்பு எது? "மின்னிடை மடவார்" என்ற திருவாய்மொழியில் இவள் அவனிடம், "நீ எனக்கு வேண்டாம்", என்றாள்; அதற்கு அவன் அவளிடம், "நீ எனக்கு வேண்டும்" என்று தனது நிலை தடுமாறி நின்ற நிலையை இவளுக்குக் காண்பித்து அல்லவோ இவள் இத்தகைய

நிலையை இன்று அடையும்படியாகச் செய்தான்? “மால்” என்ற சொல்லுக்கு எதிர்மறை விதமாக அருளிச்செய்கிறார்; இவன் அவ்விதம் இல்லாமல், ஸர்வேச்வரன் என்பதான தனது உயர்வு வெளிப்படும்படியாக வந்து நின்றிருந்தால், இவள் அத்தகைய நிலையை இன்று அடைந்திருக்கமாட்டாள். இப்படிப்பட்ட அன்பு கொண்ட அவனுக்கு.

வ்யாக்யானம் - (வையமளந்த மணாளற்கு) உகவாதாரையுங்கூட விடமாட்டாத வ்யாமோஹம். “அழித்தாயுன் திருவடியால்” என்று இவளையும் தன் காற்கீழேயிட்டுக் கொண்டானிறே. அச்செயலுக்கு எழுதிக் கொடுத்தாள் இவளொருத்தியுமேயிறே; “மூவடி மண் கொண்டளந்த மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்” என்கிறாள்: அவனிரந்து மண் பெற்றான், இவளுகந்து பொன் பெற்றாள். உகப்பாலே பெறுமது உரை பெற்றிருக்குமே.

விளக்கம் – (வையம் அளந்த மணாளற்கு) - தன்னை விரும்பாதவர்களையும் கூட விட இயலாதபடி உள்ள அன்பு. தன்னிடம் விருப்பம் இல்லாத சேதநர்களையும் கூட விடாதபடி, இந்த உலகத்தை அளந்தபோது அவர்களையும் தனது அடிமையாக்கிக் கொண்டது போன்று, ப்ரணயகாலத்தில் தனது முகம் மாறி நின்ற இவளையும் “அழித்தாய்” என்பதாக தனக்கு அடிமையாக்கிக் கொண்டான் அல்லவோ? அத்தகைய செயலுக்கு இவள் மயங்கி, தன்னையே எழுதிக் கொடுத்தாள். ஆனால் அவ்விதம் எழுதிக் கொடுத்தாள் என்பதற்குச் சான்று உள்ளதோ என்றால் பெரியதிருமொழி (9-4-2) - மூவடி மண் கொண்டளந்த மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன் – என்பதாகும். அவன் யாசகம் செய்து மண்ணைப் பெற்றான்; இவள் மகிழ்ந்து பொன்னைப் பெற்றாள்; உகப்பின் மூலம் பெறுவது கொண்டாடி நிற்பதாகும்.

வ்யாக்யானம் – (மணாளன்) போக்தா. (நீலக்கருநிற மேக நியாயற்கு) நெய்த்துக் கறுத்த நிறத்தையுடைய மேக ஸ்வபாவற்கு. நியாயம் - ஸமம், ஒப்பு. ப்ரயோஜந நிரபேக்ஷமாகக் கொடுக்கையும், கொடுக்கப் பெறாதபோது உடம்பு வெளுக்கையும். வ்யாமோஹமின்றியே யொழிந்தாலும் விடவொண்ணாத வடிவும் ஔதார்யமு மிருக்கிறபடி.

விளக்கம் – (மணாளன்) – அனுபவிப்பவன். (நீலக்கருநிற மேக நியாயற்கு) - பளப்பளக்கும் கறுத்த நிறம் கொண்ட மேகத்தின் இயல்பு கொண்டவனுக்கு. நியாயம் என்பதற்கு “இயல்பு” அல்லது “ஒப்பு” என்று பொருள். இதற்கு இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம். நியாயம் என்பது இயல்பு என்பதாகும்போது,மேகம் போன்று தாராளமான இயல்பு என்று கருத்து; இதனை, ஒப்பு என்று பொருள் கொள்ளும்போது, மேகம் போன்று வடிவைக் கொண்டான் என்று கொள்ளவேண்டும். மேகத்தின் இயல்பு என்ன? எந்தவிதமான பலனையும் எதிர்பார்க்காமல் கொடுப்பதும், அப்படிக் கொடுக்காத நேரங்களில் வெளுத்திருப்பதும் ஆகும். அவனிடம் அன்பு இன்றி அகன்றாலும், விட இயலாதபடி அவன் திருமேனி அழகும், தாராள குணமும் உள்ளது.

வ்யாக்யானம் - (நீலக்கருநிற மேக நியாயற்கு) மஹாபலியை வடிவைக் காட்டி அபஹரித்தாற்போலேகாணும் இவளையும் வடிவைக் காட்டி அபஹரித்தபடி. இவள் பிச்சேறுகைக்கிட்ட மையிருக்கிறபடி. “மைப்படி மேனி”யிறே. (கோலச் செந்தாமரைக் கண்ணற்கு) தர்சநீயமாய், வாத்ஸல்யத்தாலே சிவந்து, விகாஸாதிகளையுடைத்தான திருக்கண்களையுடையவனுக்கு. “தாமரைத் தடங்கண் விழிகளின் அகவலைப்படுப்பான்” என்று கண்ணாலேயாயிற்று அகப்படுத்திக் கொண்டது. விசேஷணந்தோறும் அவனுக்கு என்று தனித்தனியே யகப்பட்ட துறைகளைச் சொல்லுகிறாள்.

விளக்கம் – (நீலக்கருநிற மேக நியாயற்கு) – மஹாபலியைத் தனது வடிவைக் காண்பித்து அபகரித்தான் ; அது போன்று இவளையும் தனது வடிவத்தைக் காண்பித்து அபகரித்தான். இவள் பித்துப்பிடித்தவள் போன்று ஆனாள்; இதற்கு இட்ட மந்திர மை போன்று அவன் உள்ள நிலை. ஆனால் இவன் திருமேனி கருமையாக உள்ளதோ என்றால், திருவிருத்தம் (94) – மைப்படி மேனி - என்பது காண்க. அஞ்சனம் என்பது போன்றுள்ள திருமேனி. (கோலச் செந்தாமரைக் கண்ணற்கு) - காண்பதற்கு இனிமையாக, வாத்ஸல்யம் காரணமாகச் சிவந்து, மலர்தல் போன்றவற்றைக் கொண்ட திருக்கண்கள் உடையவனை. திருவாய்மொழி (6-2-9) - தாமரைத் தடங்கண் விழிகளின் அகவலைப்படுப்பான் - என்று தனது திருக்கண்களால் இவளை அகப்படுத்தினான். ஒரு இடத்தில் “அவனுக்கு” என்று கூறினால் மட்டுமே போதுமானது அல்லவோ? இதனைத் தவிர, “மாலுக்கு, மணாளற்கு, நியாயற்கு, கண்ணற்கு” என்று ஏன் தனித்தனியாக நான்காம்

வேற்றுமையில் கூறவேண்டும் என்பதற்கு அடுத்து விடை அளிக்கிறார்; "அவனுக்காக" என்று தனித்தனியாகத் தான் அகப்பட்ட இடங்களைக் கூறுகிறாள். அதாவது, அன்பு என்ற குணம், செயல்கள், திருமேனி, கண்ணழகு ஆகிய ஒவ்வொன்றிலும் தனித்தனியே அகப்பட்டு நின்றாள் என்று கருத்து.

வ்யாக்யானம் - (மால் இத்யாதி) தன் மகள் மேல்பட்ட அம்புகளை யெண்ணுகிறாள்; இதொரு குத்து, இதொரு வெட்டு, இதோரம்பு என்று. (என் கொங்கலரேலக் குழலி) மதுஸ்யந்தியா நின்றுள்ள பூவையுடைத்தாய், நறுநாற்றத்தையுடைத்தான குழலையுடைய என் பெண்பிள்ளை. கொங்கென்பது தேன். அலரென்பது பூ. ஏலம் - நறுநாற்றம். இவள் மயிர்முடியொன்றுக்குந் தோற்றுக் குமிழி நீருண்ணுமவன்கிடீர் இவளையழித்தான்! பங்களப்படை கொண்டு, தனிவீரம் செய்வாரை யழிக்குமாபோலே. (இழந்தது சங்கே) இவள் மயிர்முடி கண்டு அவனிழக்கக் கடவத்தை இவளிழந்தாள். சங்கு - வளை.

விளக்கம் – (மால் இத்யாதி) - மாலுக்கு என்பது தொடங்கி, "கோல செந்தாமரை கண்ணனுக்கு" என்பது முடிய உள்ளவற்றை அம்புகளாக உருவகம் செய்கிறார். தன் மகள் மீது பாய்ந்த அம்புகளை எண்ணுகிறாள். வேறு ஒருவிதமாகவும் உருவகம் செய்கிறார். அம்பு என்று திருக்கண்களைக் கொள்கிறார். இரண்டு கண்கள் மூலம், குணங்கள் மற்றும் செயல்கள் மீது கொள்ளும் ஈடுபாடு. "இது ஒரு குத்து, இது ஒரு வெட்டு, இது ஒரு அம்பு" என்பது போன்று பலவும் பாய்ந்தபடி உள்ளன. (என் கொங்கலரேலக் குழலி) - மதுவைப் பெருகியபடி உள்ள மலர்கள் கொண்டதாக, ஸுகந்தத்தைக் கொண்டதான அழகான தலைமுடியைக் கொண்ட என் பெண்பிள்ளை. கொங்கு என்றால் தேன், அலர் என்பது மலர், ஏலம் என்பது ஸுகந்தம். இவள் தலைமுடிக்குத் தோற்று ஆழ்ந்து மூழ்கியபடி உள்ளவன் அல்லவோ இப்போது இவளை அழித்தான்! கூட்டு படை கொண்டு வந்து, தனியாகப் போர் புரிந்து வீரத்தைக் காண்பிப்பவர்களை வீழ்த்துவது போறு, இவன் தனது பல அம்புகளாலும் வீழ்த்துகிறான். (இழந்தது சங்கே) - இவளுடைய தலைமுடியைக் கண்டு அவன் இழக்கவேண்டியதை இப்போது இவள் இழந்து நிற்கிறாள்.

6-6-2. சங்கு வில் வாள் தண்டு சக்கரக் கையற்கு
செங்கனிவாய்ச் செய்ய தாமரைக் கண்ணற்கு
கொங்கு அலர் தண் அம் துழாய் முடியானுக்கு என்
மங்கை இழந்தது மாமை நிறமே

பொருள் - திருவிக்ரமனாக நின்று அளந்துபோது, அதற்கு ஏற்றாப்போலத் தோன்றிய ஐந்து ஆயுதங்களைக் கொண்ட திருக்கரங்கள் உடையவனாகவும்; சிவந்த கனி போன்று உள்ள உதடுகளையும், சிவந்த தாமரை போன்ற திருக்கண்களையும் கொண்டவனாகவும்; ஸுகந்தம் நிரம்பியதாகவும், காண்பவர்கள் களைப்பைப் போக்குவதாகவும், காண்பதற்கு இனிமையானதாகவும் உள்ள துளசிமாலையால் அலங்கரிக்கப்பட்ட திருமுடியைக் கொண்டவனாகவும் உள்ள அவனிடம் ஈடுபாடு கொள்ளும் எனது பெண்பிள்ளை, தனது அழகான நிறத்தை இழந்தாள்.

அவதாரிகை - திருவுலகளந்தருளினபோதை திவ்யாயுதாதிகளில் அழகிலே யகப்பட்டுத் தன்னுடைய அழகிய நிறத்தை யிழந்தா ளென்கிறாள்.

விளக்கம் – "இந்த உலகஙளை அளந்தபோது திவ்யமாக இருந்த ஆயுதங்களுடைய அழகில் அகப்பட்டவளாக, தனது அழகான நிறத்தை இழந்தாள்" என்கிறாள்.

வ்யாக்யானம் - (சங்கு இத்யாதி) ஸ்ரீபஞ்சாயுதங்களின் சேர்த்தியழகிலேயாயிற்று இவள் ஈடுபட்டது. இவளுடைய ஓராபரணம் வாங்குகைக்கு எத்தனையாபரணம் பூண்டு காட்டினான்? கைக்குமேல் ஐந்துங் காட்டிக் காணும் இவளுடையஆபரணம் வாங்கிற்று. ஆபரணகோடியிலும் ஆயுதகோடியிலும் இருபுடை மெய்க்காட்டிறே இவைதாம்!

விளக்கம் – (சங்கு இத்யாதி) - ஸ்ரீபாஞ்சாயுதங்களுடைய சேர்த்தி அழகில் அல்லவோ இவள் ஈடுபட்டு நின்றாள்? "இவளுடைய திருமேனியின் நிறம்" என்னும் ஓர் ஆபரணத்தை அபகரிப்பதற்காக, அவன் எத்தனை ஆபரணங்களை அணிந்து வந்துள்ளான்! இங்கு "கைக்குமேல் ஐந்து காட்டி" என்பதற்கு இரண்டு பொருள்கள் உண்டு; "திருக்கரங்களில் உள்ள பஞ்சாயுதங்களைக் காண்பித்து" என்பது நேரடியான பொருள் ஆகும். அல்லது தாயக்கட்டம் விளையாடும்போது, ஐந்து என்று பகடையில் விழுந்தால் வெட்டும்படியாக ஒரு காய் இருந்தால்,

“இதோ, கைமேல் ஐந்து போட்டு அதனை வெட்டுகிறேன்” என்று கூறுவர். இப்படியாக இவளுடைய ஆபரணமாகத் திகழ்ந்த திருமேனி நிறத்தைப் பறித்தான். ஆனால் இந்த ஐந்திற்கும் ஆயுதமாக உள்ள தன்மை மட்டுமே அல்லாமல், ஆபரணமாக உள்ள தன்மையும் இருக்கிறதோ என்பதற்கு விடை அளிக்கிறார்; ஆபரணங்களுடைய வரிசை மற்றும் ஆயுதங்களுடைய வரிசை என்பதான இரண்டு பக்கங்களிலும் சேர்தல் என்பது இவற்றுக்கு உண்டு.

வ்யாக்யானம் - (செங்கனிவாய்ச் செய்யதாமரைக் கண்ணற்கு) கையிலே யொன்றை தரித்துக் காட்டி ஆகர்ஷிக்க வேண்டியிருந்ததோ? ஸ்மிதமும் நோக்குமமையாதோ நலிகைக்கு? (கொங்கலரித்யாதி) மதுஸ்யந்தியான திருத்துழாய்மாலை ஆதிராஜ்ய சூசகமான திருபிஷேகத்திலே யுடைவனுக்கு. வைத்த வளையத்தைக் காட்டிக்காணும் இவள் நிறத்தை யபஹரித்தது. ஆபரணசோபை அவயவசோபை ஒப்பனையழகு, எத்தனை செய்யவேணும் இவள் நிறங் கொள்ளுகைக்கு. (என் மங்கை) தன் பருவத்தாலே இவற்றையடையத் தோற்பிக்குமவள்கிடீர் நிறமிழந்தாள்! மாமைநிறம் - அழகியநிறம். மாமை - அழகு, அழகிய நிறத்தையிழந்தாள்.

விளக்கம் – (செங்கனிவாய்ச் செய்யதாமரைக் கண்ணற்கு) - இவளைத் துன்புறுத்துவதற்கு திருக்கரத்தில் ஏதேனும் ஒன்றை ஏந்தி நின்று, அதன் மூலம் இவளை வசீகரம் செய்ய வேண்டுமோ? புன்னகையும், கனிவான பார்வையும் போதாதா? (கொங்கலரித்யாதி) - தேன் சொரிந்தபடி உள்ள திருத்துழாய் மாலையை, “அனைத்திற்கும் சக்கரவர்த்தி” என்பதை மறைமுகமாக வெளிபடுத்தும்விதமாக, தனது திருமுடியில் கொண்டவனுக்கு. இப்படியாக வைத்துக் கொண்டிருந்த துளசிமாலையைக் காண்பித்து அல்லவோ இவளை அபகரித்தான்! இவளுடைய திருமேனி நிறத்தை அபகரிப்பதற்காக “ஆபரண அழகு, திருமேனி அங்கங்களுடைய அழகு, ஒப்பனை அழகு” என்பதான எத்தனை செய்ய வேண்டியதாக உள்ளது! (என் மங்கை) - தனது பருவத்தால், இவை அனைத்தையும் தோற்கடிக்கும்படிச் செய்யவல்லவன் அல்லவோ, இன்று தனது நிறத்தை இழந்தாள். “மாமை நிறம்” என்றால் “அழகிய நிறம்”. தனது நிறத்தை இழந்தாள்.

6-6-3. நிறம் கரியானுக்கு நீடு உலகு உண்ட
திறம் கிளர் வாய்ச் சிறுக் கள்வன் அவற்கு
கறங்கிய சக்கரக் கையவனுக்கு என்
பிறங்கு இரும் கூந்தல் இழந்தது பீடே

பொருள் – ஆலிலையில் திருக்கண்கள் வளரும்போது, கருமையான நிறம் கொண்டவனாகவும்; அனைத்து பெரிய லோகங்களையும் உட்கொள்ளும்போது அதற்கு ஏற்றவிதமாகத் தோன்றும் அழகான சிவந்த வாயைக் கொண்டு, அந்தச் சிறிய ரூபத்தில் அனைத்து பெரிய லோகங்களையும் மறைத்து வைத்தவனாகவும்; இவ்விதம் ப்ரளயத்தின்போது காப்பாற்றிய பின்னர், உலகங்களையும் வெளியே விட்டு, இந்த ஜகத்தில் ஏற்படும் விரோதிகளை அழிப்பதற்கான செயலில், சுழன்று வரும் சக்கரம் கொண்ட திருக்கரம் உடையவனாகவும் உள்ள அவனுக்கு, ஒளிர்ந்தபடி உள்ள பெருமை கொண்ட கூந்தல் உடைய எனது மகள், தனது பெருமையை இழந்தாள்.

அவதாரிகை - வடதளசாயிபடிகளிலே அகப்பட்டு இவள் தன் பெருமையை யிழந்தாளென்கிறாள்.

விளக்கம் – "ஆலின் இலையி சயனித்துக் கிடந்தவனுடைய விதங்களில் அகப்பட்ட இவள், தனது பெருமையை இழந்தாள்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (நிறங்கரியானுக்கு) "இழந்தது மாமைநிறம்" என்றாள்; அந்நிறமும் அவன் பக்கலிலே கிடக்கையாலே இரட்டித்துக் காட்டிற்று வடிவு. தன்னிறத்துக்கு மேலே ஒரு நிறம் உண்டாயிற்று. "நீலக்கருநிற மேக நியாயற்கு" என்னவேண்டாவாயிற்று; நிறத்துக்கு ஒப்பாகமாட்டாமையாலே. நெய்த்துக் குளிர்ந்து ச்ரமஹரமான வடிவு தன்னையே சொல்லுகிறாள்.

விளக்கம் – (நிறங்கரியானுக்கு) - முதல் பாசுரத்தில் "நீலக்கருநிற மேகம் நியாயற்கு" என்று மேகத்தை ஒப்பு நோக்கி உரைத்தாள். ஆனால் மேகம் இவனுக்கு ஒப்பாக இல்லை என்பதால் மேகத்தை விட்டவளாக, "நிறங்கரியான்" என்று "நீலக்கருநிறம்" என்பதை மட்டும் கூறுகிறாள். இவள் இழந்தது, தனது அழகான நிறம் என்கிறாள். அந்த நிறமும் அவன் பக்கம் இருந்ததால் மேலும் ஒரு மடங்கு அதிகமான நிறத்தைக் காண்பிப்பதாக உள்ளது. "நீல" என்று கூற வேண்டாதபடி ஆயிற்று; காரணம்,

இவன் நிறத்திற்கு ஒப்புள்ளதாக இல்லை என்பதாகும். கலங்கி குளிர்ந்து, களைப்பைப் போக்கும் வடிவத்தைக் கூறுகிறாள்.

வ்யாக்யானம் - (நீடுலகு இத்யாதி) பரப்பையுடைத்தான பூமியைத் திருவயிற்றிலே வைத்த ப்ரகாரத்தைக் கோட்சொல்லாநின்ற திருவதரத்தையுடைய. கிளருகை – சொல்லுகை; “வையமேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே” என்னக்கடவதிறே. ரக்ஷகத்வ ப்ரகாசகமான திருவதரம். (சிறுக்கள் வரவர்க்கு) சிறு வயிற்றிலே பெரிய லோகங்களை வைத்து, பரிச்சேதிக்கவொண்ணாத சேஷ்டிதத்தை யுடையவனுக்கு. (நீடுலகுண்ட திறங் கிளர்வாய்) வேறொருவர் வாயால் கேட்க வேண்டாதே, இவன் வாயாலே சொல்லக் கேட்கலானபடி. (சிறுக்கள் வரவர்க்கு) வடிவில் சிறுமையும், ரக்ஷகத்வத்தில் பாரிப்புமிருக்கிறபடி, தன்னுடைய ரக்ஷகத்வத்தையும் அகடிதகடநா ஸாமர்த்யத்தையுங் காட்டியாயிற்று, இவளையகப்படுத்திற்று. (கறங்கிய சக்கரக்கையவனுக்கு) கறங்குகை – சுழலுகை; விரோதி நிரஸந த்வரையாலே எப்போதும் சுழலாநின்றுள்ள திருவாழியைத் திருக்கையிலே யுடையவனுக்கு; தான் ரக்ஷகனானவனவன்றியே, பரிகரமும் ரக்ஷணத்திலே உத்யுக்தமாயிருக்கிறபடி. அவன் கைப்பிடித்தார் எல்லாரும் ரக்ஷண த்வரையுடையாரயிறே யிருப்பது. ஸ்ரீ பாஞ்சஜந்யாழ்வானும், “ஒரு வினையுண்டாகவற்றே, நாம் வாய்க்கரையிலேயிருந்து ஓசையை விளைத்து வினை தீர்க்க!” என்று ப்ரார்த்தியா நிற்கும்.

விளக்கம் – (நீடுலகு இத்யாதி) - மிகுந்த பரப்பைக் கொண்ட இந்தப் பூமியைத் தனது திருவயிற்றில் வைத்த விதத்தை வெளியே உரைப்பதாக உள்ள சிவந்த உதடுகள் கொண்டவன். கிளருகை என்றால் கூறுதல். அவ்விதம் வாயானது இவன் இரகசியங்களை வெளியே கூறுமோ என்றால், பெரியாழ்வார் திருமொழி (1-1-6)- வையமேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே - என்பது காண்க. (சிறுக்கள் வரவர்க்கு) - சிறுவனாக உள்ளபோது களவு என்பது என்ன? இதற்கு விடை அளிக்கிறார். பாலனாக உள்ளபோதிலும், அளவிட இயலாதபடி அதிமானுஷ லீலைகள் பலவற்றைச் செய்தவன் என்கிறார்; சிறிய வயிற்றில் அனைத்து லோகங்களையும் வைத்து, எல்லை காண இயலாதபடியான லீலைகள் கொண்டவனுக்கு. (நீடுலகுண்ட திறங் கிளர்வாய்) - அவனுடைய லீலைகளை வேறு ஒருவர் வாய் மூலம் கேட்டு உணரவேண்டிய அவசியம் இன்றி, இவன் வாய் மூலமே கேட்டு உணரலாம்படி. (சிறுக்கள் வரவர்க்கு) - வடிவில் சிறிய தன்மையும், காப்பாற்றும்

இயல்பில் நீண்ட தன்மையும் உள்ளது. தன்னுடைய “காப்பாற்றும் தன்மை” மற்றும் “யாராலும் செய்ய இயலாதவற்றைச் செய்து முடிக்கும் தன்மை” ஆகியவற்றைக் காண்பித்து அல்லவோ இவளை அகப்படுத்தினான்? (கறங்கிய சக்கரக்கையவனுக்கு) - கறங்கிய என்றால் சுழலுதல். விரோதிகளை அழிக்கும் வேகம் கொண்டதால் எப்போதும் சுழன்றபடி உள்ள திருச்சக்கரத்தைத் தனது திருக்கரத்தில் கொண்டவனுக்கு. தான் மட்டும் காப்பாற்றுபவன் என்பது அல்லாமல், தனது ஆயுதங்களும் அத்தகைய காப்பாற்றும் செயல்களில் எப்போதும் தயாராக உள்ள தன்மை. மற்றவர்களுக்கும் அவனுக்கும் உள்ள வேறுபாட்டை கூறுகிறார்; ஒருவன் மற்றொருவனுக்கு ஏதேனும் ஒன்றை அளிக்க முன்வந்தால், அவ்விதம் கொடுப்பவனுக்கு அருகில் உள்ளவர்கள் தடுக்க முயல்வர்; ஆனால் இங்கு அவ்விதம் அல்லாமல், இவனுடைய திருக்கரங்களால் பிடிக்கக்கப்படும் அனைவருமே மற்றவர்களைக் காப்பாற்றும் வேகம் கொண்டவர்களாகவே உள்ளனர். ஆனால் ஸ்ரீபாஞ்சஜன்யத்திற்கு இவ்விதம் காப்பாற்றும் வேகம் இல்லையோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; ஸ்ரீபாஞ்சஜந்யமும், “ஒரு வினை ஏற்பட்டால் அல்லவோ நாம் இவனுடைய வாயில் அருகில் நின்று ஒசை எழுப்பி அந்த வினையைக் குடிக்க இயலும்!”, என்று ப்ரார்த்தித்தபடி உள்ளது.

வ்யாக்யானம் - (என் பிறங்கிருங் கூந்தல்) சுற்றுடைத்தாய் ஒழுகு நீண்ட மயிர் முடியையுடையவள். மிகவும் பெரிய குழலையுடையவ ளென்றுமாம். இருமை - பெருமை. இங்குப் பெருமையாவது நீட்சி. பிறங்குதல் - மிகுதி. கூந்தலென்கிறது - மயிர். “ஐம்பால் கூந்தல் குழல்” என்றிவை பர்யாயம். எதிர்த்தலையைத் தோற்பிக்கும் குழலையுடையவள் கிடீர் தன் பெருமையிழந்தாள். பீடு – பெருமை. “யஸ்யஸா ஜநகாத்மஜா அப்ரமேயம் ஹி தத் தேஜ:” என்று அவனுக்கும் பெருமையைக் கொடுக்கும் பெருமையைக் கிடீர் இவளிழந்தது.

விளக்கம் – (என் பிறங்கிருங் கூந்தல்) - நல்ல அடர்த்தியும் நீளமும் உள்ள கூந்தல் கொண்டவள். மிகவும் பெரிய கூந்தல் உடையவள் என்று கருத்து. இருமை என்றால் பெருமை. இங்கு பெருமை என்பது, நீளமான கூந்தல் உள்ள தன்மை. பிறங்குதல் என்றால் மிகுதி. கூந்தல் என்பது தலைமுடி ஆகும்; “ஐம்பால், கூந்தல், குழல்” ஆகியவை ஒரே பொருள் தரும் சொற்களாகும். தனது முன்பாக நிற்கும் யாராக இருந்தாலும் அவர்களை வீழ்த்தும் திறம் கொண்ட கூந்தல் உள்ளவள் அல்லவோ, இன்று தனது பெருமையை இழந்தாள்! பீடு என்றால் பெருமை. ஆரண்யகாண்டம் (37-18) - யஸ்யஸா ஜநகாத்மஜா அப்ரமேயம் ஹி தத் தேஜ: -

எந்த ஒரு ஜனகருடைய புத்திரியானவள், யாருடைய மனைவியாக உள்ளாளோ, அப்படிப்பட்டவன் அளவற்ற தேஜஸ் கொண்டவனாக உள்ளான் -என்று அவனுக்கும் பெருமையை அளிக்கவல்ல தனது பெருமையை அல்லவோ இவள் இழந்தாள்!

6-6-4. பீடு உடை நான்முகனைப் படைத்தானுக்கு
மாடு உடை வையம் அளந்த மணாளற்கு
நாடு உடை மன்னர்க்குத் தூது செல் நம்பிக்கு என்
பாடு உடை அல்குல் இழந்தது பண்பே

பொருள் – ஸ்ருஷ்டி செய்வதற்குத் தேவையான ஞானம் போன்றவற்றைக் கொண்ட நான்முகனை ஸ்ருஷ்டித்தவனும்; செல்வம் நிறைந்த பூமியை அளந்த செயல் மூலம் தனக்கு மட்டுமே அல்லாமல் மற்ற யாருக்கும் வசப்படாதவிதமாக இனிமையாக உள்ளவனும்; நாட்டிற்கு உரிமை உள்ள பாண்டவர்களுக்காகத் தூது செய்தமை என்பதன் மூலம் பரிபூர்ணமாக உள்ளவனும் ஆகிய அவனுக்கு விஸ்தாரமான அல்குல் கொண்ட எனது பெண்பிள்ளை இழந்தது, தனக்கே உரிய ஸ்வபாவத்தை ஆகும்.

அவதாரிகை - சதுர்முக ஸ்ரஷ்டாவான மேன்மையைப் பாராதே ஆச்ரிதார்த்தமான மஹாகுணத்தை யுடையனனுக்கு இவள் நீர்மையை யிழந்தாளென்கிறாள்.

விளக்கம் - “நான்முகனையும் கூடப் படைத்தவன் என்பதான மேன்மையை ஆராயாமல், தனது அடியார்களுக்காகத் தூது செல்வது போன்ற மிகவும் உயர்ந்த குணங்கள் கொண்டவன் விஷயத்தில் இவள் தனது நீர்மையை இழந்தாள்”, என்கிறாள்.

வ்யாக்யானம் – (பீடுடையித்யாதி) சதுர்த்தச புவநத்தையும் ஸ்ருஷ்டிக்கவல்ல பெருமையையுடைய சதுர்முகனை ஸ்ருஷ்டித்தவனுக்கு. பீடு – பெருமை. (மாடு இத்யாதி) மாடு - தநம். வசுமதியான பூமியென்னுதல்; மாடென்று - இடமுடைமையாய், பரப்பையுடைய பூமியென்னுதல். திருவுலகளந்தருளின க்ருத்ரிம சேஷ்டிதத்தாலே தன்னை யநந்யார்ஹமாக்கினவற்கு. (நாடு இத்யாதி) நாடுடைய ராஜாக்களான பாண்டவர்களுக்குத் தூது போய் அத்தாலே பூர்ணனானவனுக்கு. பகவதபிப்ராயத்தாலே, அவர்களை நாடுடை

மன்னரென்கிறார்காணும், "இருக்கைக்கு ஒரு குறிச்சியுங்கொடோம்" என்று ராஜ்யம் பண்ணுகிறார்கள் துர்யோதநாதிகளாயிருக்க. "அபிஷிச்யச லங்காயாம்" இத்யாதிவத்.

விளக்கம் – (பீடுடையித்யாதி) - பதினான்கு லோகங்களையும் ஸ்ருஷ்டிக்கவல்ல பெருமை பொருந்திய நான்முகனையும் ஸ்ருஷ்டித்தவனுக்கு. (மாடு இத்யாதி) - மாடு என்றால் தனம். அதாவது வஸுமதியான பூமி. அல்லது மாடு என்பதை, "இடம் கொண்டது" என்பதாகப் பொருள் கொண்டு, "மிக்க பரப்பளவு கொண்ட பூமி" என்றும் கொள்ளலாம். (நாடு இத்யாதி) – நாட்டைக் கொண்ட அரசர்களாகிய பாண்டவர்களுக்காகத் தூது சென்று அதன் மூலம் பரிபூர்ணமாக உள்ளவனுக்கு. ஆனால் நாட்டை ஆண்டது துரியோதனன் என்பதாக உள்ளபோது, பாண்டவர்களை ஏன் கூறினார் என்றால், பகவானுடைய அபிப்ராயத்தில் பாண்டவர்களே அரசர்கள் என்பதால் இவ்விதம் கூறுகிறார். அதாவது, "இருப்பதற்கு ஒரு சிறிய ஊரையும் கூடத் தரமாட்டோம்", என்பதாக அரசை ஆண்டவர்கள் துரியோதனன் போன்றவர்களாக உள்ளபோது, இவ்விதம் செய்தான். ஆனால் அடியார்களுடைய காரியத்தைச் செய்தால் மட்டும் இவன் பரிபூர்ணன் என்றாகிறானோ என்பதற்கு விடை அளிக்கிறார்; ஸங்க்ஷேப இராமாயணம் (85) - அபிஷிச்யச லங்காயாம் - விபீஷணனுக்கு முடிசூட்டியதன் மூலம் செய்ய வேண்டிய செயலைச் செய்து முடித்தவன் ஆகிறான் - என்பது காண்க.

வ்யாக்யானம் - (நம்பிக்கு) "இன்னார் தூதன்" என நின்ற செயலாலே இட்ட சட்டை பீறும்படியிருக்கை. அடியிலே ஜகத்தையுண்டாக்கி, அபஹரித்தாருண்டாகில் எல்லை நடந்து மீட்டுக் கொண்டு, அத்தை ஆச்ரிதர்க்கு ஆக்குகைக்கு இழிதொழில் செய்த இந்நீர்மையையுங்காட்டி இவள் நீர்மையை யபஹரித்தான். (என் பாடுடையல்குல்) இடமுடைத்தான நிதம்ப ப்ரதேசத்தையுடையவள். பாடு - இடம். "பும்பாவம் மநஸாயயு:" ஸஜாதீயரை யழிக்கும் வடிவழகு. அவன் பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரியானாற்போலே. பண்பு - நீர்மை.

விளக்கம் - (நம்பிக்கு) – "இன்னார் தூதன்" என்று நின்ற செயல் காரணமாக, இட்ட சட்டையானது திருமேனி மகிழ்வு காரணமாகப் பெருத்ததன் விளைவாக, கந்தலாகும்படி உள்ளது என்பதால் "நம்பி" என்றார். முன்பு இந்த ஜகத்தை

ஸ்ருஷ்டித்து, அதனை அபகரித்த காரணத்தால், எல்லை கடந்து சென்று அதனை மீட்டு, அதனைத் தனது அடியார்களுக்கு மீண்டும் அளிப்பதற்காகத் தூது செல்லுதல் போன்ற தாழ்ந்த செயல்களைச் செய்து, இத்தகைய நீர்மையால் இவளுடைய நீர்மையை அபகரித்தான். (என் பாடுடையல்குல்) - மிக்க இடம் கொண்டதான நிதம்ப பகுதி உடையவள். பாடு என்றால் இடம்.ஆனால் அல்குலை ஏன் கொண்டாடவேண்டும் என்றால், மஹாபாரதத்தில் - பும்பாவம் மநஸாயயு: – த்ரௌபதியில் நிதம்பப் பகுதியைக் கண்டு பெண்களும் கூட, ஆண்பாவம் அடைந்தனர் - என்பதால் ஆகும். இப்படியாகத் தன்னைப் போன்றபெண்களும் கூட வசப்படும்படி உள்ள வடிவழகு; இது எப்படி உள்ளது என்றால், இராமாயணம் – பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரி - இராமனுடைய அழகில் ஆண்களும் மயங்கினர் - என்பது போன்று ஆகும்.

6-6-5. பண்பு உடை வேதம் பயந்த பரனுக்கு
மண் புரை வையம் இடந்த வராகற்கு
தெண் புனல் பள்ளி எம் தேவ பிரானுக்கு என்
கண்புனை கோதை இழந்தது கற்பே

பொருள் – பகவத் ஸ்வரூபம் போன்றவற்றை உள்ளது உள்ளபடியே வெளிப்படுத்தும் இயல்பைக் கொண்ட வேதத்தை, நான்முகன் போன்றவர்களுக்கு உபதேசம் செய்யும் தன்மை கொண்டவனும்; தெளிந்த நீர் கொண்ட ப்ரளயத்தில் ஆலிலையில் இந்த ஜகத்தைக் காப்பாற்றும் சிந்தனையுடன் பள்ளி கொண்டவனும்; அத்தகைய சிந்தனை காரணமாக, என்னைப் போன்றவர்கள் மற்றும் நான்முகன் போன்றவர்கள் ஆகியோருக்கு எந்தவிதமான வேறுபாடும் இன்றி உபகாரங்கள் செய்பவனும் ஆகிய அவனுக்கு, காண்பவர்கள் கண்களைப் பீடித்துக் கொள்ளும் தலைமுடி கொண்ட எனது இந்தப் பெண்பிள்ளை, தனது அறிவுடைமை என்ற தன்மையை இழந்தாள்.

அவதாரிகை - வேதப்ரதாநம் முதலான உபகாரங்களைப் பண்ணினவனுக்கு என் மகள் கற்பிழந்தா ளென்கிறாள்.

விளக்கம் – "வேதங்கள் மீட்டுக் கொடுத்து, உபதேசித்து என்பதான பல உபகாரங்கள் செய்தவனுக்கு எனது மகள் தனது கற்பை (கற்பு என்றால் அறிவுடைமை) இழந்தாள்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (பண்புடை வேதம்) ஈச்வரனை உள்ளபடியே காட்டித் தரும் நீர்மையையுடைய வேதம். (பயந்த) ஸுப்தப்ரபுத்த ந்யாயத்தாலே ப்ரஹ்மாவை யோதுவிக்கை. (பரனுக்கு) "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோவை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்கிறபடியே ப்ரஹ்மாவுக்கு வேதசக்ஷுஸ்ஸைக் கொடுக்கையாலும், வேதைகஸமதிகம்யனாகையாலும் ஸர்வஸ்மாத்பரனானவனுக்கு. அறிவிழந்தார்க்கு அறிவு கொடுக்குமவன்கிடீர் இவளறிவை அழித்தான்.

விளக்கம் – (பண்புடை வேதம்) - வேதத்திற்குப் பண்பு என்ன என்பதற்கு விடை அளிக்கிறார். ஈச்வரனை உள்ளது உள்ளபடி காண்பித்துத் தரும் நீர்மை கொண்டது வேதம் ஆகும். (பயந்த) – "பயந்த" என்றால் "ஸ்ருஷ்டித்த அல்லது உண்டாக்கிக் கொடுத்த" என்று பொருள். ஆனால், நித்யமாக உள்ள வேதங்களை உண்டாக்குதல் என்பது எப்படிப் பொருந்தும் என்பதற்கு விடை அளிக்கிறார். "உறங்கியவன் எழுந்தான்" என்ற ந்யாயத்தின் அடிப்படையில் நான்முகனுக்கு ஓதுவித்தான். (பரனுக்கு) - யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோவை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை - அனைத்தையும் ஸ்ருஷ்டிப்பதற்கு முன்பு நான்முகனைப் படைத்து, அவனுக்கு வேதத்தை உபதேசம் செய்தான் - என்பதற்கு ஏற்ப, நான்முகனுக்கு வேதம் என்ற கண்ணை அளிப்பதாலும்; வேதங்களால் மட்டும் அறியப்படுபவன் என்பதாலும்; அனைத்துவிதங்களிலும், அனைத்தைக் காட்டிலும் உயர்ந்தவன் ஆகிறான். "பண்புடை வேதம் பயந்த பரனுக்கு கற்பிழந்தாள்" என்று தாயார் உள்ள மனநிலையை அருளிச்செய்கிறார்; அறிவிழந்தவர்களுக்கு அறிவைக் கொடுக்கும் இவன், இவளுடைய அறிவை அழித்தான்.

வ்யாக்யானம் - (மண் புரை வையம்) மண் மிக்க பூமி. (இடந்த வராகற்கு) மண்ணோடு விண்ணோடு வாசியற, தன்முகேந ரக்ஷித்தபடி, பிறருடைய ஸ்வரூப ஸித்த்யர்த்தமாகத் தன்னையழிய மாறுமவன், அழிவுக்கு இட்ட வடிவுக்கு ஆலத்தி வழிக்க வேண்டும்படியிறே இருப்பது. "மானமிலாப் பன்றியாந்தேசு" என்னக் கடவதிறே. மண் மிகுதி சொல்லிற்று எடுக்கையில் அருமை தோற்றுகைக்காக.

விளக்கம் – (மண் புரை வையம்) - புரை என்றால் மிகுதி; மண் மிகுந்த பூமி. (இடந்த வராகற்கு) - மண் மற்றும் விண் என்னும் வேறுபாடு இன்றி அனைத்தையும் தனது திருமுகத்தால் காப்பாற்றியவன். "மண்ணைத் தனது திருமுகத்தால் காத்தல்" என்றால், ப்ரளய ஆபத்தின்போது, அனைத்தையும் உள்ளே விழுங்கு, தனது திருவயிற்றில் வைத்துக் காத்தமை; "விண்ணைத் தனது திருமுகத்தால் காத்தல்" என்றால், அன்னப்பறவையாக வந்து வேதங்களை உபதேசம் செய்து காப்பாற்றியமை. ஆனால், தாழ்ந்த பிறவியாக, அருவருக்கத்தக்க வராஹ ரூபத்திற்கு, இவள் தனது கற்பை இழப்பாளோ என்றால், மற்றவர்களுடைய ஸ்வரூபம் நிலைப்பதற்காகத் தனது ரூபத்தை இவ்விதம் தாழ்வாக மாற்றிக் கொண்டவன் என்பதால் ஆகும். தனது மேன்மையை விடுத்து, நீர்மையைக் கொள்வதற்காக எடுத்த வராக ரூபம்; இதற்கு ஆலத்தி வழிக்கவேண்டும்படி உள்ளது. அதாவது, த்ருஷ்டி தோஷத்திற்கு ஏற்ற பரிகாரம் செய்தல். ஆனால் வராஹ ரூபமானது அத்தகைய அழகு கொண்டதாக இருக்குமோ என்பதற்கு ப்ரமாணம், நாச்சியார் திருமொழி (11-8) – மானமிலாப் பன்றியாந்தேசு – என்பதாகும். பூமியின் கடினத்தன்மை ஏன் கூறப்பட்டது என்றால், அதனை இடர்ந்து எடுப்பதன் அருமையை உணர்த்துவதற்காக ஆகும்.

வ்யாக்யானம் - (வராகற்கு) அல்லாத ரக்ஷணம் போலன்றியே முக்யமான ரக்ஷணம் இதிறே எல்லார்க்கும் ஏற; "எயிற்றிடை மண் கொண்ட எந்தையிராப் பகலோதுவித்தென்னைப் பயிற்றிப் பணி செய்யக் கொண்டான்" என்று இவளோட்டையார்க்கு ஜ்ஞாந ப்ரதாநம் பண்ணினவன் இவளை அறிவழித்தான்.

விளக்கம் – (வராகற்கு) - மேலே கூறப்பட்ட ரக்ஷணம் போன்று அல்லாமல், அனைவருக்கும் ஸம்ஸாரத்திலிருந்து கரையேறுவதற்கு ஏற்ற முக்கியமான ரக்ஷணம் இது அல்லவா? எதனால் இவள் தன்னை இழந்தாள் என்றால், பெரியாழ்வார் திருமொழி (5-2-3) - எயிற்றிடை மண் கொண்ட எந்தையிராப் பகலோதுவித்தென்னைப் பயிற்றிப் பணி செய்யக் கொண்டான் - என்பதற்கு ஏற்ப, இவளைப் போன்றவர்களுக்கு, அதாவது பெரியாழ்வார் போன்றவர்களுக்கு ஞானத்தை அளித்தான். இப்படிப்பட்டவன் இவளுடைய அறிவை அழித்தான்.

வ்யாக்யானம் - (தெண்புனற்பள்ளி) தெளிந்த புனலை ஏகார்ணவத்தைப் படுக்கையாக வுடையவன். அழிந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டரான

சேதநர்க்கு அறிவு கொடுக்கக் கிடக்கிறவனுக்கு. ஸத்தையே பிடித்துண்டாக்கி அறிவு கொடுக்கக் கடவ அவன்கிடீர் உண்டான அறிவை வாங்கிக் கொள்ளுகிறான்! (எம் தேவபிரானுக்கு) ப்ரஹ்மேசாநாதிகளுக்கும் உபகாரகனானவனுக்கு. "ஈச்வரோஹம்" என்றிருந்தாளாகில் அறிவிழக்க வேண்டாகிடீர்! (என் கண் புனை கோதை) கண்டார்கண்கள் பிணிப்புண்கையாலே, அவற்றை ஆபரணமாகவுடைய மயிர்முடியை யுடையவள். அதாவது வைத்த கண் வாங்கவொண்ணாதிருக்கை. கண்களுக்கு விஷயம் தலையாய்விட்டது. (இழந்தது கற்பே) ஸர்வர்க்கும் ஜ்ஞாந ப்ரதனான தனக்குங்கூட அறிவு கொடுக்கும் இவள் அறிவைக்கிடீர் இழந்தது. "அபிஜ்ஞா ராஜதர்மாணாம்". கற்பு -கல்வி, அதாவது ஜ்ஞாநம்.

விளக்கம் – (தெண்புனற்பள்ளி) - தெளிந்த புனலைக் கொண்டபடி, எங்கும் ஒரே ஸமுத்திரமாகக் காட்சி அளித்த ப்ரளயத்தில், அந்த ஸமுத்திரத்தையே தனது படுக்கையாகக் கொண்டு கிடந்தவன்; அப்படிப்பட்டவனுக்கு. அழிந்த ஜகத்தை மீண்டும் படைத்து, இவ்விதம் படைக்கப்பட்ட சேதநர்களுக்கு அறிவு அளித்தபடி உள்ளவனுக்கு. அவர்களுடைய இருப்பு என்பதை மட்டுமே கொண்டு, அவர்களை மீண்டும் படைத்து, அவர்களுக்கு ஏற்ற ஞானத்தை அளித்தபடி இருக்கவேண்டிய அவனே, இவளுக்கு உண்டான அறிவை வாங்கிக் கொள்கிறான். (எம் தேவபிரானுக்கு) - நான்முகன் மற்றும் ருத்ரன் போன்றவர்களுக்கு உபகாரம் செய்பவனாக உள்ளவனுக்கு. இவள் "ஈச்வரோஹம் - நானே ஈச்வரன்" என்று இருந்திருந்தால், இவ்விதம் அறிவை இழந்திருக்கமாட்டாள். (என் கண் புனை கோதை) - காண்பவர்களுடைய கண்கள் பிணிப்பு உண்டாகையால், அவற்றையே ஆபரணமாகக் கொண்ட தலைமுடி உடையவள். அதாவது வைத்த கண் வாங்க இயலாமல் பிணித்தபடி உள்ள தன்மை. கண்களுக்கு விஷயம் இவள் தலையே என்றானது. (இழந்தது கற்பே) - அனைவருக்கும் ஞானத்தை அளிக்கவல்ல அவனுக்கும் கூட ஞானம் அளிக்கவல்லவள் அல்லவோ, இன்று தனது அறிவை இழந்தாள்! ஆனால் அவனுக்கும் கூட ஞானம் அளிக்கும் அறிவு இவளுக்கு உண்டோ என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; அயோத்யாகாண்டம் (26-4) - அபிஜ்ஞா ராஜதர்மாணாம் - அரசர்களுடைய தர்மங்களை அறிந்தவள் - என்பது காண்க. கற்பு என்பது கல்வி அதாவது ஞானம்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்